[1986 நவம்பர் 20

சேலம் கஞ்ச மலையில் இரும்பு தாது.

101—(*வினா எண் 8507) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கஞ்சமலையில் இரும்பு தாது கிடைப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பயன்படுத்த ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசிடம் தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லாம் அண்ணா அவர்களோடு கூட இருக்கின்ற நேரத்தில், அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, சேலத்தில் இரும்பாலைத் திட்டம் வேண்டும் என்று ஆர்பாட்டம் நடத்தி, அதற்குப் பின்னாலே, உருக்காலை உருவாவதற்காக திட்டங்கள் தரப்பட்டு இன்றைக்கு உருக்காலை உருட்டாலை யாக சேலத்தில் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். என்றாலும், கிடைக்கின்ற தாதுப் பொருட்களை முறையாக மத்திய அரசாங்கம் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு தீவிரமான நடவடிக்கையை அரசு மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 10 ஆண்டுக்காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டே இருக்கிறது. அதோடு, அங்கே சேலத்தில் இருக்கிற பிரச் சினை, அங்கே இருக்கிற கனிமப் பொருள் 35 சதவிகிதம்தான் இரும்புச் சத்துள்ளதாக இருக்கிறது என்று தஸ்தூர் கமிட்டி ஒரு விவர அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். ஆகவே, அதிகச் செலவாகும் என்ற காரணத்தினால், மத்திய அரசு இன்னமும் அதை ஆய்வில் வைத்து இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையில், ஓ.என்.ஜி.சி யாக இருந்தாலும், அல்லது வேறு எந்த கனிமப் பொருள் கிடைப்பதாக இருந்தாலும், நம்மிடம் சத்து குறைவு என்று கூறு வதைத்தான் முன் நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப் பார்க்கும்போது, தஞ்சை மாவட்டத்திலே கிடைக் கின்ற ஆயிலைக் கூட, குறைவு என்றுதான் சொல்லி, கை விடு கின்ற நிலைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1986 நவம்பர் 20]

எனவே, அப்படிப்பட்ட நிலைக்கு தள்ளப்படுமானால், மாநில அரசே ஒரு ஆய்வாளரை அமர்த்தி, அது சரியா, தவறா என்று பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நரிமணத்திலே கிடைக்கின்ற எண்ணெயைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான தகுந்த விடையை நான் அளிக்க முடியும். தற்போது இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை யில் மத்திய அரசை மேலும் கேட்டுக்கொண்டு வருகிறோம். இருந்தாலும், ஏற்கெனவே நான் சொன்னதுபோல், இரும்பு கனிமப் பொருளின் சத்து குறைவாக இருப்பதால், மத்திய அரசு அதை இன்னமும் ஆய்வில் வைத்திருக்கிறது.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் கிடைக்கக்கூடிய இரும்புக் கனியானது இலாபகர மானது, அதனால் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க முடியும் என்றுதான் ஜப்பான் நாட்டிலுள்ள நிபுணர்களும், இந்தியாவி லுள்ள தஸ்தூர் கமிட்டி அறிக்கையும் கிடைத்த பிறகுதான் இன்றைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அன்றைய பாரதப் பிரதமர் மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து, இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன் அறிகுறியாக, சேலத்து மாங்கனியைக் கூட, தங்கத்தில் செய்து, அந்த இரும்புக் கனியை எடுத்து தொழிற்சாலை அமைக்க மாங்கனியை அளித்தார்கள். அப்படி இலாபகரமாக இருக்கிறது என்ற ஆய்வுக்குப் பிறகு தானே அடிக்கல்லே நாட்டப் பட்டது? இடையிலே தடைக்கல் ஏற்பட்டதற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து, அந்த தடைக் கல்லை நீக்கி, உடனே உருக்காலை ஏற்பட வழிவகை காண்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நல்ல யோசனை, வரவேற்கத்தகுந்தது.

குடிநீர் வடிகால் வாரியத்தை பிரித்தல்.

102—(*வினா எண் 8555) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரியத்தை நிர்வாக நலனுக்காக பிரித்து அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?